
மாலை முரசு
பக்கங்கள் 12
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 23 செவ்வாய்க்கிழமை 08.08.2023 அதிர்வு 08

## மத்திய வங்கி வளாகத்திற்குள் பெண் உட்பட எண்மர் கைது!



மத்திய வங்கி வளாகத்திற்குள் சட்ட விரோதமாகப் பிரவேசித்து போராட்டத்தில் ஈடுபட்டனர் என்ற கருத்தில்

04▶

# '13' பற்றிய தமது முன்மொழிவுகளை ரெலோ, புளொட் சேர்ந்து கையளிப்பு

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாகக் கருத்து நிலைப்பாடு சமர்ப்பணம்

கொழும்பு,ஓகஸ்ட்08

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகக் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவு களைச் சமர்ப்பிக்கும்படி ஜானாதிபதி யினால் கோரப்பட்டமைக்கு இணங்க, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்ட ணியின் சார்பில் அதன் முன்மொழிவு களை புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பியும் ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இன்றைய தினம் ஓர் ஆவணமாகக் கையளித்தனர்.

04▶



## கந்தானை இரசாயனத் தொழிற்சாலையில் தீ! ஒருவர் சாவு; 102 மாணவர்களுக்குப் பாதிப்பு!!



கந்தானை இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஏற்பட்ட இரசாயனக் கழிவுகளால் பாட சாலை மாணவர்கள் 102 பேர் திடீரென சுகவீனமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

04▶

## எரிகிற நெருப்புக்கு எண்ணை ஊற்றும் வேலையை தொல்லியல் திணைக்களம் முன்னெடுக்கக் கூடாது

### அமைச்சரவையில் டக்ளஸ் நேற்றுக் காட்டம்

கொழும்பு,ஓக.08

தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வு களும் ஆடையாளப்படுதல்களும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களின தும் கலாசார தொன்மைகளையும்

04▶



## கட்சியின் செயலர் பதவியிலிருந்து சிவாஜி நீக்கப்பட்டமை உண்மையே

### தமிழ் தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் விளக்கம்



எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழ் தேசிய கட்சி யின் செயலாளர் நாயகம் பதவியில் இருந்து நீக்கப்பட்டது உண்மை என தெரிவித்த தமிழ் தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சு.நிஷாந் தன் இதனைக் கட்சியின் தலைவர்

04▶







# ‘பள்ளிக் கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல’ நூல் முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வ னின் ‘பள்ளிக் கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல’ நூல் முல்லைத்தீவு பாடசாலை களுக்கு யாழ். பல்கலைக்கழக மாண வர்களால்வழங்கப்பட்டுள்ளது. இந்தநூல் கள் முல்லைத்தீவுப் பாடசாலைகளுக்கு டாக்டர் விக்கினேஸ்வரா நினைவாக அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வன்னியில் குழந்தைகள் மீண்டும் ஒருமுறை கல்விப்புரட்சி நிகழ்த்த ‘பள்ளிக் கூடங்கள் வெறும் கட்டடக்கூடுகள் அல்ல’ கல்வி சார் விழிப்புணர்வு நூல் வழங்கப்பட்டது.

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய இந்த நூலை டாக்டர் பரம நாதன் விக்கினேஸ்வரா முதலாம் ஆண்டு நினைவாக ஜீவநதி பதிப்ப கம் வெளியிட்டுள்ளது.

முல்லைதீவு மாவட்டத்தின் மல்லாவி, பாலிநகர் மற்றும் கோட்டைகட்டியகுளம் பிரதேசத்திலிருந்து யாழ். பல்கலைக் கழகம் சென்ற வ.கலையரசி, கி.அலெக் ஷன், சி.கருணிகா, யோ.துசாந்தன், ப.கயல்விழி, அ. ராதிகா, ச.சாலினி ஆகிய மாணவ மாணவிகளால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நூலுக்கு இந்திய நடிகர் நாசர் அணிந்துரை வழங்கியுள்ளார்.

அந்த அணிந்துரையில் – கவிதை, கட்டுரைகள், கதைகளால் மட்டுமல்ல, தம்பி தீபச்செல்வனை பழகியும் பேசி யும் பயணித்தும் அறிவேன். உன்னால் உலோக் குண்டுகளால் எம் மக்களை சுட்டு சாகடிக்க முடியுமானால், நான் என் சொற்குண்டுகளால் நீ மறைத்த ரகசி யங்களை பொய்களை சுட்டு சிதறடிப் பேன் என எழுத்தே ஆயுதமாய், நடுகல் பதித்த வெளியிலே, பயங்கரவாதியாய் தீர்க்கமாய் திரிபவன் தீபச்செல்வன்.

நாங்களும் எங்கள் கற்பனை வர லாற்றின் வழி ஆளுக்கொன்றாகத் திரித்து பகிர்ந்து கொண்டோம். ஒன்று அதீத உணர்ச்சிவசப்பட்டோம். அல்லது தூர நின்று வேடிக்கை பார்த்தோம். எதிர் பார்ப்பின்றி, ஆதாயமற்று, ஒரு எழுத் தாளன், தன் ஐம்புலனும் அனுபவித் ததை தேர்ந்தெடுத்த சொற்களால் சொற் தொடர்களால் புதினங்கள் உருவாகும் போதுதான் கலங்கித் தணிந்த நீரின் படிகத் தெளிவுபோல அகக் கண்ணுக்குப் புலப்படுகிறது.

ஒரு சமூகத்தை அழித்தொழிக்க வேண்டுமென்றால் அதின் அறிவுத் தொப்புள் கொடியை அறுங்கள், அடி மரத்தை அல்ல.

ஆதாரத்துடன் பல பக்கங்கள் பின் னிருக்கும் அரசியலை அதிகார வர்க்கத் தின் ஆட்டக்கலையை புரிய வைத்து எதிர்கால காலத்துக்கான தயாராகுதலுக் கான உந்தித் தள்ளுகிறது இப் புத் தகம்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்கிழக்கு பல்கலை நூலகக் குழு

# கொழும்பு பல்கலை நூலகத்தின் நடைமுறைகள் குறித்து ஆராய்வு





(அ.அஸ்வர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக நூல கக் குழு அண்மையில் கொழும்பு பல்கலைக் கழக நூலகத்துக்கு உத்தி யோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டிருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடன் தலைமையில் சென்ற இக்குழுவினர் அங்குள்ள நூலகத்தின் சகல பிரிவுகளுக்கும் சென்று அதன் நடைமுறைகள், நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

இக் குழுவினர் நூலகத்தின் மூத்த பணியாளர்களுடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடி, நூலக செயல்பாடு கள் மற்றும் தத்தமது நூலகங்களால் மேற்கொள்ளப்படும் சேவைகள் குறித்து தங்களின் அனுபவங்களை பரிமாறிக் கொண்டனர்.

நூலகம் தொடர்பான நவீன கட்ட மைப்புகள், ஆய்வுகள், வெளியீட்டு கள் மற்றும் இத்துறையில் எதிர் கொள்ளப்படும் சவால்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இங்கு நேரடியாக கலந் துரையாடப்பட்டன.

தென்கிழக்கு பல்கலைக்கழக நூல கர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பதில் நூலகர் சஜீவனி சோமரத்ன தலை மையிலான குழுவினருடன் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொள்ளப் பட்டன.

# கடற்றொழிலாளர் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு





கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

குறித்த இரு மாவட்ட கடற்பரப்புகளில், கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கின் நலன் கருதி அந்தந்த மாவட்டங்களின் கடல் எல்லைகளை வரையறை செய்யப்படவுள்ளன.

பூநகரி பிரதேசத்தின் கௌதாரி முனை, மண்ணித்தலை, விநாசியோடை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அண்மையில் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்றிருந்தார்.

இதன்போது, அந்தப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்களோடு கலந்துரையாடியதன் அடிப்படையிலும், அவர்களோடு இணைந்து கௌதாரிமுனை தொடக்கம் கல்முனை வரையான கடற்பரப்பை படகுப்பயணம் மூலம் பார்வையிட்டதன் அடிப்படையிலும், அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வாதுவயில் இளைஞன் பலி!

வாதுவ கல்லூரி வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று (07.08.2023) பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று வாதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் வாதுவ, தல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் என கூறப்படுகின்றது.

இந்த இளைஞன் வாத்துவ பாடசாலை பகுதியிலிருந்து வாதுவ நோக்கி மோட்டார் சைக்கிளை செலுத்தியுள்ளார்.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி 25 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு சுவரில் மோதியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி – மலையகக் கட்சிகள் இடையிலான சந்திப்பு ஒத்திவைப்பு



நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய வம்சாவளி மலையக கட்சிளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் சந்திப்பை நடத்த, ஜனாதிபதி செயலகம் அழைப்பு விடுத்த நிலையில் அது இப்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

12 ஆன் திகதி நுவரெலியாவில், தமிழ் முற்போக்குக் கூட்டணி, “மலையகம்-200“ தொடர்பில் நடத்த உள்ள, “நாம் இலங்கையர்“ பேரணி காரணமாக, கூட்டணி எம்.பிகள் 11 ஆம் திகதி கொழும்பில் இல்லாத காரணத்தாலும், 10 ஆம் திகதி, பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்துள்ள முழுநாள் விவாதம் காரணமாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், உசித மான தினத்தை கலந்தாலோசனையின் பின் தெரிவிப்பதாக ஜனாதிபதி செயலகம் தனக்கு அறிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் நேற்றிரவு தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## எரிகிற நெருப்பிற்கு...

வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரிகிற நெருப்பிற்கு எண்ணை ஊற்றுவதாக அமையக் கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார் என்று கூறப்பட்டது.

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் நான்கு பாரம்பரிய பிரதேசங்கள் தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய பகுதிகளாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தப் பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப் படுத்தும் செயற்பாடானது உரிய வழி முறைகளை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதைத் தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில், அனைத்து மக்களும் கௌரமான உரிமைகளை பெற்று வாழும் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும், பிரச்சினைகளை இலகுவாகத் தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளைக் கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம்பெற்று இருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

---

## கந்தானை...

சுத்திகரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் தயாரிக்கும் இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் முகாமையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ முற்றிலுமாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

கணேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

கந்தானையில் உள்ள முன்னணி பெண்கள் பாடசாலை ஒன்றிற்கு அருகிலுள்ள இரசாயன தொழிற்சாலையிலேயே தீ பரவியது . இதையடுத்து பெற்றோர்கள் குழுவொன்று தமது பிள்ளைகளை வெளியேற்ற முற்பட்டதால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இரசாயன வெளிப்பாடு குறித்த பயம் காரணமாக, தங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்ல பாடசாலை வளாகத்திற்குள் வலுக்கட்டாயமாக பெற்றோர் நுழைய முயன்றபோது, பாடசாலை நிர்வாகத்திற்கும் பெற்றோர் குழுவிற்கும் இடையே பதற்ற சூழ்நிலை ஏற்பட்டது.

கந்தானை பொலிஸார் உடனடியாக நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

சுவாசக் கோளாறு ஏற்பட்டு சுமார் 102 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கந்தானை பிரதேசத்திலுள்ள இரசாயன உற்பத்தி நிலையத்திற்கு சொந்தமான களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீயினால் பரவிய புகை காரணமாகவே குறித்த மாணவர்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மற்றும் நீர்கொழும்பு தீயணைப்பு பிரிவினரும், கடற்படையின் தீயணைப்பு பிரிவினரும் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

---

## ‘13’ பற்றிய...

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் அதிகாரியான ஆசு மாரசிங்கவிடம் இது தொடர்பான கடிதம் கையளிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் உள்ள பிரதான அம்சங்கள் வருமாறு:-

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டணியாக எங்கள் கருத்துக்களைப் பின்வருமாறு முன்வைக்க விரும்புகிறோம்.

1. ஏற்கனவே 1988 இல் நாடாளுமன்றத்தில் ஐந்தில் ஆறு பெரும்பான்மையுடன் 13 ஆம் திருத்தம் அரசமைப்பில் இணைக்கப்பட்டது.

2. அன்றிலிருந்து நாடு முழுவதிலும் மாகாண சபைகள் நிறுவப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்தலை நடத்துவதற்காகக் கலைக்கப் படும் வரை அவை செயல்பட்டன.

3. எனவே, ஏற்கனவே இருக்கின்ற தானதும் அரசமைப்பின் ஒரு பகுதியாக இருப்பதையும் நடைமுறைப்படுத்துவதற்கு கருத்துக்களைக் கோர வேண்டிய அவசியமில்லை.

எவ்வாறாயினும், 13 இன் கீழ் வழங்கப்பட்ட சில மாகாண சபை அதிகாரங்கள் திட்டமிட்ட வகையில் காலத்திற்கு காலம் அவ்வப்போது திரும்பப் பெறப்பட்டன. மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்ட அந்த அதிகாரங்களை மீண்டும் வழங்கி, காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13ஐ அதன் அசல் வடிவில் நடைமுறைப் படுத்த நாங்கள் முன்மொழிகிறோம்.

– என்றுள்ளது.

---

## கட்சியின் செயலர்...

சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் வெளிப்படையாக உளச்சான்றுடன் தெரிவிக்க வேண்டும் என்றார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் இந்தியா பயணிப்பதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்,13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி, இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியிருந்தனர்.

அந்த சமயத்தில் இந்தியாவில் தங்கியிருந்த எம்.கே.சிவாஜிலிங்கம், அதற்கு முரணான– முற்றிலும் நேர்மாறான –கோரிக்கையை வலியுறுத்தி மோடிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அவர் தமது கடிதத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தக் கோரியிருந்தார்.

இந்நிலையில் கட்சியின் செயலாளர் பொறுப்பிலிருந்து எம்.கே.சிவாஜிலிங்கத்தை விலகுமாறு கட்சி தலைமையால் கோரப்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கட்சியின் தலைமைக் குழு கூட்டத்தில் எம்.கே.சிவாஜிலிங்கம் தாம் பதவி விலகுகிறார் எனஅறிவித்தார். இதனை ஏனைய தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர் – என்றார்

---

## மத்திய வங்கி...

பெண்ணொருவர் உள்ளிட்ட 8 பேரைப் பொலிஸார் இன்று கைது செய்துள்ளனர்.

குத்தகை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி சிவில் அமைப்பு ஒன்று இன்று காலை முதல் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது.

இதனையடுத்து, அவர்கள் சட்ட விரோதமாக மத்திய வங்கி வளாகத்திற்குள் பிரவேசித்தனர் என்று கூறி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள்: இலங்கைப் பொறியியலாளர் ஆய்வில்!

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்கின்றதா என்பதை ஆய்வு எக்ஸோ மார்ஸ் ரோவரின் தொழில்நுட்ப தலைவராக இலங்கை பொறியியலாளர் இந்திரஜித் மஹிலால் டி சில்வா பணியாற்றுவதாக தெரியவந்துள்ளது.

அவர் செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் ஆய்வு செய்ய பயன்படுத்தப்படும் எக்ஸமார்ஸ் என்ற ரோபோ ரோவரின் தொழில்நுட்ப துறையின் தலைவராக பணியாற்றுகிறார்.

எக்ஸோமர்ஸ் ரோவரை ஒருங்கிணைத்து பரிசோதிப்பதே அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்பாகும். 'நான் இந்த திட்டத்தின் தலைமை தொழில்துறை பொறியாளராக பணிபுரிகிறேன். எக்ஸோ மார்ஸ் ரோவரை ஒருங்கிணைத்தல் மற்றும் சோதனை செய்யும் பணியை நான் பெற்றுள்ளேன்' என்று மஹிலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எனது பாடசாலை நாள்கள் எனது தொழில்முறை மற்றும் கல்வி வெற்றியின் பிரதிபலிப்பாகும். நான் படித்து 19 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணியில் உறுப்பினராக பணியாற்றினேன். இந்த வெற்றிக்கு எனது தாயும் தந்தையும் முக்கிய செல்வாக்கு செலுத்தினர். வாழ்க்கையைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையையும், என்னை நம்புவது எப்படி என்பதையும் எனக்குக் கற்றுக் கொடுத்தவர்கள். -என்றார்.

1976 ஆம் ஆண்டு பிறந்த மஹிலால் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை மூன்று பாடசாலைகளில் பயின்றார். கொழும்பு இசிபதன வித்தியாலயம், கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் நுகேகொட லைசியம் சர்வதேச பாடசாலை என்பனவற்றில் அவர் கல்வி பயின்றுள்ளார்.

அவர் 1999 ஆம் ஆண்டு மேற்படிப்புக்காகக் பிரித்தானியாவில் குடிபெயர்ந்தார். லண்டனில் உள்ள கின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் தொழில்துறை பொறியியலில் பட்டம் பெற்றுள்ளார்.

2020 ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பத் திட்டமிடப்பட்ட எக்ஸமார்ஸ் ரோவர் திட்டத்தின் முக்கிய நோக்கம் செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் உள்ளதா என்பதை ஆய்வு செய்வதாகும்.

ஐரோப்பாவிலிருந்து செவ்வாய்க்கு செல்லும் முதல் ரோவர் இதுவாகும். ஆனால் ரஷ்ய-உக்ரைன் போர் காரணமாக இங்கு நடவடிக்கைகள் சற்று தடைபட்டுள்ளன.

எக்ஸமார்ஸ் ரோவர் செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் சுமார் 2 மீற்றர் ஆழம் தோண்டி மண் மாதிரிகளை எடுக்கப் போவதாகவும், மண் மாதிரிகளில் உயிரினங்கள் உள்ளதா அல்லது படிமமாக்கப்பட்ட நுண்ணுயிரிகள் உள்ளதா என்று சோதிக்கப் போவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வறட்சியான காலநிலையால் பூங்காக்கள் மூடப்பட்டுள்ளன




கொழும்பு, ஓக.08

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக உடவலவ மற்றும் யால பூங்காக்கள் சுற்றுலா பயணிகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வனஜீவராசிகள் அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று (07) கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

உடவலவ மற்றும் யால பூங்காக்களை சுற்றுலாப் பயணிகளுக்காக தற்காலிகமாக மூடுவது தொடர்பிலும் அந்த கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எட்டப்பட்டது.

எவ்வாறாயினும், நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக உடவலவ மற்றும் யால பூங்காக்களை மூடுமாறு ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் கேலிக்கூத்து

*அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நாளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரையாற்றவிருக்கின்றார்.*

*13 ஆவது திருத்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் விவகாரத்தை நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்கு விடுகிறேன் என்ற பெயரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் அரசியல் நகர்வு வேடிக்கையானது சிறுபிள்ளைத்தனமானது. இது அதிகாரப் பொறுப்பும் விவேகமுமற்ற அரசியல் சித்து விளையாட்டன்றி வேறில்லை.*

*சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் மேற்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வைக் குறை கூறியிருக்கின்றார். உண்மைதான்.*

*அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் ஏற்கனவே அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் அது அங்கீகரிக்கப்பட்டு, நாட்டின் உயர் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டு 35 ஆண்டுகள் கடந்து விட்டன.*

*இன்றும் அதை - அரசமைப்பில் இருப்பதை - நடைமுறைப்படுத்தாமல் இருப்பதுதான் பெருந்தவறு. அதன் நடைமுறையாக்கம் குறித்து கருத்துக் கேட்பதற்காக மீண்டும் ஒரு தடவை அந்த விடயத்தை நாடாளுமன்றுக்குக் கொண்டு செல்வது அதிலும் விடப் பெருந்தவறு.*

*13 ஆம் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு உரிய பொலிஸ் அதிகாரங்களை அச்சபைகள் நடைமுறைப்படுத்துவதற்கான விவகாரம் குறித்து முடிவெடுப்பதற்காகவே நாடாளுமன்றத்தின் கருத்தைப் பிரதானமாக செவிமடுக்கத் தாம் விரும்புகிறார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.*

*இது விவகாரத்தில் நாடாளுமன்றத்தின் பணி எல்லாம் எப்போதோ முடிந்து, பூர்த்தியாகி விட்டமையை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*இந்த அரசமைப்புத் திருத்தம் வந்த காலத்தில் எல்லாம், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு அளவில் அரசியலுடன் சம்பந்தப்பட்டிருந்தார். எனவே பல விடயங்களை அவருக்கு நினைவுபடுத்தத் தேவையில்லை. எல்லாம் அவருக்குத் தெரியும்.*

*அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளமை பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது மட்டுமல்ல, அதையும் தாண்டி மாகாணம் தோறும் பொலிஸ் ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கான சட்டமும் கூட தனியாகக் கொண்டு வரப்பட்டு, 1988 இலேயே நிறைவேற்றப்பட்டும் விட்டது.*

*இனிமேல் மத்திய பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் புதிய மாகாண பொலிஸ் ஆணைக் குழுக்களை நியமித்து, மாகாண பொலிஸை இயக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியதுதான் எஞ்சிய பணியாகும்.*

*அதைச் செய்யாமல், மீண்டும் நாடாளுமன்றத்தின் அனுமதிக்கும் கருத்துக்கும் தாம் செல்கிறார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவது வெறும் அரசியல் கேலிக்கூத்தன்றி வேறில்லை.*

# மின் கட்டணத்தில் இனி மாற்றமில்லை

## மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.08

மின் கட்டணங்கள் மீண்டும் திருத்தப்படமாட்டாது என மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் விலை ஆண்டுக்கு இருமுறை மாற்றியமைக்கப்படும். திட்டமிடப்பட்ட மின்சார வெட்டுக்கள் இன்றி ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை திட்டமிட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நஸ்டத்தை ஈடுசெய்யும் வகையில் மின்சார கட்டணத்தை உடனடியாக மீண்டும் ஒருமுறை அதிகரிக்க வேண்டும் என மின்சார சபை அண்மையில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் மின்சக்தி அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மின்சார வாரிய பொது மேலாளர் ஜி.ஏ.டி.ஆர்.பி. செனவிரத்ன கடந்த 21 ஆம் திகதி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகததுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி, மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் இந்த வருடத்தின் அடுத்த சில மாதங்களில் செலவுகளை ஈடுகட்ட முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

இவர்களின் வருமானத்தை 3ஆயிரத்து 300 கோடி ரூபாவால் அதிகரிக்கும் வகையில் இந்தக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி 66 சதவீதம் மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 2ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின் கட்டணம் 25 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கள மொழியில் விண்ணப்பம் தமிழ் பேசும் மக்கள் சிரமம்

**(பாறுக் ஷிஹான்)**

வெளிநாடுகளில் தொழில் புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதி வழங்கல் எனும் தொனிப் பொருளில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் தற்போது விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன. தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கள மொழியிலான விண்ணப்பங்களே விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு சிங்கள மொழியில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்ய முடியாமல் தமிழ் மக்கள் சிரமம் அடைகின்றனர்.

வெளிநாடு தொழில்களுக்காக சென்றிருக்கும் பெற்றோர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிலையில் இந்தப் பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி மூலம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

பின்னர் தமிழ் மொழி மூலம் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என கூறி சில அலுவலகர்கள் தமிழ் மொழி பேசும் மக்களுக்குத் தனிச் சிங்கள மொழி மூல விண்ணப்பப படிவங்களை வழங்கி வருகின்றனர்.

இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்எனபாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அக்கரைப்பற்றுப் பிரதேச செயலக காவலரண் இன்று திறந்து வைப்பு





(எம் எப். நவாஸ் )

அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகத்தின் காவலரண் திறந்து வைக்கும் நிகழ்வும் பொதுமக்கள் நலன் கருதி ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுவழிப்பாதை திறப்பும் இன்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்களும் ஏனைய உள்ளக வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதற்கான நிதி சமுக நலன்விரும்பிகளால் பங்களிப்பு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பிலும் நடைபவனி



'வேர்களை மீட்டு உரிமை வென்றிட மாண்புமிகு மலையகம்' எனும் தொனிப் பொருளில் தலைமன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட நடை பவனிக்கு வலுச் சேர்க்கும் முகமாக மட்டக்களப்பிலும் நடைபவனி இடம்பெற்றுள்ளது. இந்த நடைபவனி மட்டக்களப்பு – வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு முன்பாக இன்று (08.08.2023) காலை ஏழு முப்பது மணி அளவில் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட சிவில் சமூக அமைப்புகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபவனியானது, மதியம் 12 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நிறைவடைந்தது.

200 வருடங்களாக ஒதுக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்து வரும் மலையக மக்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்களுடைய வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து குறித்த நடை பயணம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அக்கரைப்பற்றில் நெல் அறுவடை

(எஸ். சினீஸ் கான்)

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியின் விவசாய கற்கை நெறிப் பிரிவினரால் கல்லூரி வளாகத்தில்செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையின் அறுவடை விழா கல்லூரியின் பதில் அதிபர் எம்.எம்.ஹசன் தலைமையில், கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சி.எம்.றகீப் பிரசன்னத்துடன் இன்று (08) நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எம்.எம்.சித்தி பாத்திமா கலந்து கொண்டு நெல் அறுவடையை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கல்லூரியின் வர்த்தக் பிரிவுத் தலைவர் எம்.எஸ்.எம்.றாபி, தகவல் தொழில் நுட்ப போதனாசிரியர் எம்.பி.எம்.சிராஜ், விவசாயக் கற்கை நெறியின் புறப்போதனாசிரியர் எம்.ஐ.எம். நசீர், விவசாயத் திணைக்களத்தின் ஓய்வு நிலை கிழக்கு மாகாணப் பணிப்பாளரும், கல்லூரியின் முன்னாள் விவசாய கற்கை நெறியின் புறப் போதனாசிரியருமான வை.பி .இக்பால் ஆகியொர் கலந்து கொண்டனர்.

விவசாயக்கற்கை நெறியின் விடுகை மாணவ, மாணவிகளும், புதிய மாணவ, மாணவிகளும், கைதேர்ந்த விவசாயிகளும் கலந்து கொண்டு அறுவடையை மேற் கொண்டனர்.

# அம்பாறை பைசல் காசிம் எம்.பி. பிரித்தானியா தூதுவருடன் சந்திப்பு





(கே. எ. ஹமீட் )

நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் மற்றும் பிரித்தானிய தூதரகத்தின் பிரதிநிதிகளுக்கிடையிலான உத்தியோக பூர்வ சந்திப்பு நேற்று (07) அம்பாறை மொண்ட்டி ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது அம்பாறை மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகள் சம்மந்தமாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசி தனது கோரிக்கையை முன்வைத்தார்.

பிரித்தானிய தூதரகத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகளுக்கான முதலாவது செயலாளர் ஹென்றி டொனாடி, துணை நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மிஸ்லி நிசார் மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளருமான பைசல் காசிம் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பிரித்தானிய ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் இன்றும் பயனளிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழும் முஸ்லீம் சமூகத்தில் பெரும்பான்மையை கொண்டுள்ள அம்பாறை மாவட்டம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் கணிசமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. அவர்களுக்கான அபிவிருத்திகளின் பட்டியல் இதன்போது முன்வைக்கப் பட்டது.



# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் தினமும் மூன்று மில். லீற்றர் நீர் ஆவியாகிறது

## பிரதம பொறியியலாளர் வசந்த எஹலபிட்டிய தகவல்

நாட்டில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக விக்டோரியா நீர்த்தேக்கத்தில் தினசரி மூன்று மில்லியன் லீற்றர் நீர் ஆவியாகி விடுகிறது என்று அதன் பிரதம பொறியியலாளர் வசந்த எஹலபிட்டிய தெரிவித்துள்ளார்.

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நிரம்பிய நீரின் அளவிலிருந்து மேற்பரப்பில் உள்ள சுமார் இரண்டு மில்லிமீற்றர் நீர் ஆவியாகிய நிலையில் தற்போது அது இரண்டு மடங்கு அதிகமாக ஆவியாகிறது என்று அவர் கூறியுள்ளார்.

ஜேர்மனி, பிரான்ஸ், கொரியா, சீனா போன்ற நாடுகள் ஆவியாகும் நீரின் அளவைக் குறைக்க தண்ணீரில் மிதக்கும் சோலார் பேனல்களை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளனர். இதனால் அவர்களால் கூடுதல் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் தற்போது 11 சதுர கிலோ மீற்றர் நீர் மட்டுமே மீதம் உள்ளதாகவும், 13 சதுர கிலோ மீற்றர் நீர் வற்றிவிட்டதாகவும் பொறியாளர் மேலும் தெரிவித்தார்.

விக்டோரியா நீர்த்தேக்கம் 24 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தம்பிலுவில் திருக்கோவிலில் மீண்டும் கடலரிப்பு தீவிரம்!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்துக்கு உட்பட்ட தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசங்களில் பாரிய கடலரிப்பு மீண்டும் ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் தம்பிலுவில் குருகுலம் பகுதியில் பாரிய கடல–ரிப்பு மிகவும் தீவிரமாக இருந்தது .

நேற்று அங்கு பல தென்னை மரங்களை கடல் காவு கொண்டிருக்கின்றது.

மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள். மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாதுள்ளனர். அவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து கவனம் எடுப்பார்களா என்று மக்கள் வினவுகின்றார்கள்.

# மின் கட்டணம் உட்பட பாடசாலை செலவுகளுக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிட முடியாது

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

வட மாகாணத்தில் முன்னணி பாடசாலைகளில் மின்சார கட்டணம் மற்றும் ஏனைய பாடசாலை செலவுகளுக்காக மாணவர்களிடமிருந்து பணம் அறவிட முடியாது.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கில் உள்ள பிரபல பாடசாலைகள் சில பாடசாலை மின்சார கட்டணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை ஈடு செய்வதற்காக மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசால் மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்படும் நிலையில் பாடசாலைகள் மாணவர்களிடம் பணம் அறவிட முடியாது. தற்போது அரசு பாடசாலைக்கு வழங்கும் குடி தண்ணீர் தண்ணீருக்கான கோட்டாவை மட்டுப் படுத்தவுள்ள நிலையில் மாணவர்களுக்கான சுத்தமான குடிதண்ணீர் பெறுவதில் சிக்கல் ஏற்படும்.

இந்த நிலையில் பாடசாலைகள் மாணவர்களிடம் நிதியை பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் பெற்றோர்கள் நிதி வழங்க வேண்டாம். மின்சார கட்டணத்தை உயர்த்திய அரசு பாடசாலைகளுக்கான மின்சாரக் கொடுப்பனவுகளையும் அதிகரித்தே ஆக வேண்டும்.

எனவே பாடசாலைகள் மாணவர்களிடம் பணம் கேட்டால் பெற்றோர்கள் வழங்க வேண்டிய தேவை இல்லை. அவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டால் எமக்குத் தகவல் தாருங்கள் நடவடிக்கை எடுப்போம்.

இலங்கை அரசு கல்விச் சீர்திருத்தத்துக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. குறித்த நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

வட மாகாணம் உட்பட இலங்கையில் 3 ஆயிரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர்கள் பலர் சம்பளமற்ற விடுமுறையை எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். நாட்டில் விலைவாசி அதிகரித்துள்ள நிலையில் ஆசிரியருக்கானசம்பளத்தைஅதிகரிக்குமாறு பல தடவை கோரிக்கை விடுத்தும் அரசச் கவனத்தில் கொள்ளவில்லை.–என்றார்.



# மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## மக்களவையில் கடும் விவாதம்



மணிப்பூர் விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீதான விவாதம் இன்று இடம்பெற்றது. காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் கவுரவ் கோகோய் அடுக்கடுக்காக கேள்விகளை முன்வைத்தார்.

மக்களவை பகல் 12 மணிக்கு மீண்டும் கூடியவுடனேயே பா.ஜ.க. சார்பில் நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி ஒரு கேள்வியை முன்வைத்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது காங்கிரஸ் சார்பில் ராகுல் காந்தி உரையைத்தொடங்குவார்எனக்கூறப்பட்டநிலையில், இப்போது ஏன் கவுரவ் கோகோய் பேசுவதாகக் கூறுகிறீர்கள் எனக் கேள்வி எழுப்பினர். அப்போது பா.ஜ.கவினர் ராகுல் காந்தி நம்பிக்கையற்றவர் என்று விமர்சித்தனர்.

இதனால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. தொடர்ந்து இரு தரப்பையும் சமாதானம் செய்து இருக்கைகளில் அமரும்படி சபாநாயகர் ஓம் பிர்லா அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து அவையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் தொடங்கி நடைபெற்றது.

காங்கிரஸ் சார்பில் தருண் கோகோய் தான் நம்பிக்கையில்லா பிரேரணையை தாக்கல் செய்தார். கோகோய் வடகிழக்கு மாநிலமான அசாமைச் சேர்ந்தவர் என்பதால் அவரே நம்பிக்கையில்லாப் பிரேரணையை தாக்கல் செய்தார்.

அத்துடன், அதன் மீதான முதல் உரையை அவரே ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹரியானாவில் உத்தரவை மீறி நடத்தப்பட்ட மகா பஞ்சாயத்து!



மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஹரியானாவில் 144 தடை உத்தரவை மீறி கூடிய மகா பஞ்சாயத்து கூட்டம் ஒன்றில் முஸ்லிம்களுக்கு எதிராக அரசுக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு உள்ளன.

ஹரியானாவின் நூ மாவட்டத்தில் கடந்த ஜூலை 31 இல் நடைபெற்ற விஎச்பியின் ஊர்வலம் மதக்கலவரமாக மாறி இருந்தது. நூவை சுற்றியுள்ள குருகிராம், பல்வல், பரீதாபாத் மற்றும் உ.பி.யின் நொய்டா, காஜியாபாத் மாவட்டங்களுக்கும் பரவிய கலவரத்தால், பல இடங்களில் 144 தடை உத்தரவுடன் ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதை மீறி குருகிராமின் டிக்ரி பகுதியில் 200 கிராமங்களை சேர்ந்த சுமார் 700 பேருடன் நேற்றுமுன்தினம் மாலையில் மகா பஞ்சாயத்து நடைபெற்றது. பஞ்சாயத்து தலைவர் அட்டர் சிங் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இதையொட்டி டிக்ரியை சுற்றியுள்ள கிராமங்களிலும் பாதுகாப்புபடையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த பஞ்சாயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக ஹரியானா அரசுக்கு பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

கலவரத்தில் உயிரிழந்த 26 வயதான இமாம் முகம்மது சாத் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 4 இந்து இளைஞர்களை 7 நாட்களுக்குள் விடுதலை செய்ய வேண்டும். குருகிராமின் செக்டர் 57 இல் அமைந்துள்ள அஞ்சுமன் மசூதி, இந்துக்களின் பகுதியில் இருப்பதால் அதை அகற்ற வேண்டும். இந்துக்கள் வாழும் கிராமங்களில் பொலிஸாரின் திடீர் சோதனையை நிறுத்த வேண்டும். இதை அரசு ஏற்காவிடில் போராட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## மணிப்பூர் தலைவர்களுடன் சோனியா, ராகுல்!



கலவரம் நடக்கும் மணிப்பூர் மாநில காங்கிரஸ் தலைவர்களை, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பழங்குடியின அந்தஸ்து விவகாரத்தில் 2 பிரிவினரிடையே மணிப்பூரில் கடந்த 3 மாத காலமாக மோதல், வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் இதுவரை 160-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் மணிப்பூரில் இருந்து வந்த மாநிலத் தலைவர்களை, சோனியா காந்தி, ராகுல் காந்தி, கட்சியின் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் சந்தித்துப் பேசினர். மணிப்பூர் மாநில முன்னாள் முதல்வர் இபோபி சிங் உள்ளிட்டோர் இந்தக் குழுவில் இருந்தனர். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது மணிப்பூரில் தற்போதுள்ள சூழ்நிலை, நிலவரம் தொடர்பாக சோனியா, ராகுல், கார்கே ஆகியோரிடம் இபோபி சிங் உள்ளிட்டோர் தெரிவித்தனர்.

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்: ஐந்து பேர் உயிரிழப்பு

உக்ரைனின் போக்ரோவ்ஸ் நகர் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் குறைந்தது ஐவர் உயிரிழந்துள்ளதுடன் 31 பேர் காயமடைந்துள்ளதாக உக்ரைன் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீட்பு பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காயமடைந்தவர்களில் குழந்தையொன்றும் அடங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# பிரித்தானிய மிதக்கும் சிறைக்குள் புகலிடக் கோரிக்கையாளர்கள்!





பிரித்தானியாவில் அடைக்கலம் கோரும் புகலிடக்கோரிக்கையாளர்களை மிதக்கும் குடியிருப்பில் தங்க முதல்முறையாக அனுமதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

220 படுக்கையறைகள் கொண்ட அந்த மிதக்கும் குடியிருப்புகளில் இனி எவரையும் அனுப்பாதவகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க இருப்பதாக சட்டத்தரணிகள் குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஓராண்டு காலம் புகலிடக் கோரிக்கையாளர்களை தங்கவைக்கும் செலவு 1.9 பில்லியன் பவுண்டுகளை எட்டிய நிலையில், மிதக்கும் குடியிருப்புகளை உருவாக்க ரிஷி சுனக் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன், புகலிடக் கோரிக்கையாளர்களின் உளவியல் சிக்கல்கள், உடல் ரீதியான பிரச்சனைகள் மற்றும் வேறு தனிப்பட்ட காரணங்களை பட்டியலிட்டு, உள்விவகார அமைச்சகத்திற்கு எதிராக பல்வேறு சட்ட நடவடிக்கைகள் ஆராய்ந்துள்ளன.

இந்த நிலையில், அந்த மிதக்கும் சிறைக்குள் அனுப்ப முயன்ற 20 புலம்பெயர் மக்களை தடுத்து நிறுத்தியதாக தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி 5 பேர் மிதக்கும் குடியிருப்பில் சென்றுள்ளதுடன், மூன்று முதல் 9 மாதங்கள் வரையில் தங்கவைக்கப் படுவார்கள். இவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் வரையில் தங்க அனுமதிக்கப்படுவார்கள் என்றே கூறப்படுகிறது.

# சீனாவுக்கு பிலிப்பைன்ஸ் கடும் எதிர்ப்பு!



சீன தூதர் ஹுவாங் சிலியனை அழைத்து தூதரக ரீதியிலான தனது எதிர்ப்பை பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

உலகின் பரபரப்பான கடல் பாதைகளில் ஒன்றாக தென் சீனக்கடல் விளங்குகிறது.

இங்கு சீனா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, தைவான் மற்றும் புருனே ஆகிய நாடுகளிடையே அவ்வப்போது மோதல் ஏற்படுகிறது.

சர்ச்சைக்குரிய இந்த கடற்பகுதியில் அமைந்துள்ள தாமஸ் ஷோல் தீவு, பிலிப்பைன்ஸ் கட்டுப்பாட்டில் உள்ளது.


எனவே இங்கு உணவு, நீர் மற்றும் எரிபொருள் போன்றவற்றை வழங்குவதற்காக பிலிப்பைன்ஸ் படகு சென்றுள்ளது.

இந்த படகை சீன இராணுவ கப்பல் மூலம் கடலோர பாதுகாப்பு படையினர் சேதப்படுத்தியுள்ளனர்.

சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளன.

மேலும் தென் சீனக்கடல் குறித்த ஒப்பந்தத்தை அமெரிக்கா புதுப்பித்துள்ளது.

அதன்படி பிலிப்பைன்ஸ் மற்றும் தென் சீனக்கடலில் தாக்குதல் நடத்தினால் கூட்டாளி நாடுகளை பாதுகாக்க வேண்டும். ஆனால் ஆசிய விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துமாறு அமெரிக்காவை சீனா எச்சரித்துள்ளது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949